173

உ

தாய்மொழி தழைக! தாயகம் வாழ்க!!

தமிழணங்கு.

ஒரு மதிமுகத் தாள்.

"அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே."

மலர் க.] விக்ரம கார்த்திகை. [இதழ் அ.

வாழ்த்து.

கமழ்மணங் கிளரும்வாகைக் காவலன் செங்கோல் வேல்க!
இமிழ்முர செழிலி பெய்க! யாவரும் யாவும் உய்க!
அமிழ்துறழ் மகளிர் கற்பா ரணிதமி ழணங்கு வாழ்க!
தமிழ்வலந் திகழ்ந்தூ ழூழி தமிழரண் தழைக! நன்றே!

தமிழணங்கு வணக்கம்.

ஏற்ற மிசை வாய்ந் தேர்கடவி
பேற்கு மடைவாய் வரம்புகட்டி
இன்னீர் இரைத்துக் கடாவிடைகள்
இசைத்துப் பூதிப் பரம்படிக்க
வேற்றுத் திணையின் விளைபொருளும்
விரவிச் செய்யுட் குரலின்சொல்
வேளாண் வாழ்வே வளர்ந்தெளியேன்
வித்தை விளைவித் தவித்தையெலாம்
மாற்றங் கொளநன் னெறிகாத்து
மகிழும் வாழ்க்கை மிகத்தருவாய்
மலரா மிதழின் மதிமுகத்தாள்
மங்காய்! மங்கா மணிவிளக்கே!
சாற்றுங் கலைக ளனைத்தினுக்குந்
தக்கோர் தமக்குந் தமியேற்குஞ்
சரணந் தருசெந் தமிழரணிற்
சரணந் திகழ்செந் தமிழணங்கே!

ஆ. மா. சிவஞானம்.

174

தமிழணங்கு வணக்கத்தின் அருஞ்சொல் விளக்கம்.

கருத்து:—தமிழணங்கே! எனக்குச் சொல்வேளாண்மை அருள்வாய் என்பது. வேளாண்மை, பிறர்க்குப் பயன்படுமாறு வாழ்தல்.

சொல் வேளாண்மை—மொழி வளர்த்தல், நெற்பயிர் விளைத்தல்.

சொல் என்பது—நெல்லுக்கும், சொல்லுக்கும் பேர்.

நெல் வேளாண்மைக்கும் சொல் வேளாண்மைக்கும் ஒப்புமை.

நெல் வேளாண்மை:—

ஏற்றம் மிசை வாய்ந்து—துலாத்தின்மேல் ஏறி, ஏர்கடவி—ஏர் ஓட்டி, ஏற்கும் மடைவாய் வரம்பு கட்டி—நீரேற்கும் மடையைத் தன்னகத்துடைய அணையைக் கட்டி, இன்நீர் இரைத்து (இறைத்து) இனிய நீரை இறைத்து, கடா விடைகள் இசைத்து—கடாக்கள் (அ) எருதுகள் பூட்ட, பூதிப்பரம்பு அடிக்க—புழுதியில் பரம்பை அடிக்க, வேற்றுத் திணையின் விளைபொருளும் விரவி—ஏனைத் திணைகளில் விளையும் பொருள்களும் கலந்து, செய்யுள்—வயலில், குரலின் சொல் வேளாண் வாழ்வே—கதிர்களையுடைய இனிய நெற்பயிரை விளைவிக்கும் உழவு வாழ்க்கையே. வித்தை விளைவித்து—விதைகளை விளையும்படி செய்து, அவித்தை எலாம்—அங்ஙனம் விளைவித்த வித்துக்கள் எல்லாவற்றையும், மாற்றங்கொள—பண்டமாற்றமாகும்படி (அ) விலையாகும்படி, நல்நெறி காத்து—நல்ல முறையில் பாதுகாத்து.

சொல் வேளாண்மை:—

ஏற்றம் இசை வாய்ந்து—தகுதியின் புகழ் நிறைந்து, ஏர் கடவி—அணிகளை இணைத்து, ஏற்கும் அடைவாய்—பொருத்தமான முறைப்படி. வரம் புகட்டி—மேன்மையை உட்படுத்தி, இன்நீர் இரைத்து—இனிய தன்மைகளைச் சொல்லி, கடாவிடைகள் இசைத்து—வினா விடைகள் எடுத்தியம்பி, பூதி பரம் படிக்க—விபூதி வாய்ந்த கடவுளைப் பற்றிப் படித்துணர, ஏற்று—இவற்றை மேற்கொண்டு, (அ) வேற்று—வெவ்வேறாகிய, திணையின் விளைபொருளும் விரவி—ஐந்திணையொழுக்கங்களையும் விளக்கும் அகப்புறத் துறைப்பொருள்களும் பொருந்தி, இன்குரல் செய்யுள்—இனிய ஓசை நயமுடைய கவிகள் நிறைந்த, சொல் வேளாண் வாழ்வே—மொழி வளர்ச்சியை இழைக்கும் வாழ்க்கையே. வித்தை விளைவித்து—தமிழ்க் கல்வியை வளரச் செய்து, அவித்தை எலாம்—அஞ்ஞானமெல்லாம், மாற்றங்கொள—மாறுதல் அடைய, நல்நெறி காத்து—நல்லொழுக்கத்தைக் கடைப்பிடித்து. மிக தருவாய்—மிகும்படி அருள்தருவாய், (அ) மிக—மிகும்படியாக. தருவாய்—ஒரு கற்பகத்தருவே போன்று. சரணம்—புகலிடம், திருவடி.

பழமையும் புதுமையும்.

நம் முன்னோர் உயர்நிலையில் வாழ்ந்தனர். நாம் தாழ்நிலையில் இருக்கின்றோம். நம்மவர் இதனை நன்குணர்வர். அறிஞர் சிலர், நாம் இழந்த அம்முன் நிலைமையைப் பெறலாம் என முயல்கின்றனர். அப்பெரு முயற்சிகள் பலவற்றுள்ளும் சிறந்தது நம் நாட்டவர் உள்ளத்தில் நல்லுணர்ச்சியை ஊட்டலாம் நல்லவைகளை ஆய்ந்தறிதலே நல்லுணர்ச்சியின் தோற்றுவாய். நம் முன்னோர் தங்கள் நல்வாழ்விற்கெனக் கையாண்ட நன்முறைகளை நம்மனோர் உணரச் செய்தல் நமது முதற்கடமையாம். இம்முறையை நிறைவேற்றுதற்கு நம் மக்கள் ஒவ்வொருவருளத்திலும் நம் தாய்மொழிப்பற்று முற்றுமாறு செய்தல் நலம். பழந்தமிழ் நூற்பயிற்சி எங்கும் பரவினால்தான் நாம் பழைய நிலைமையைப் பெறுதற்கியலும். பழமையின் துலக்கமே புதுமை. முதுமரத்தில் அரும்பி வளரும் இளங்கொழுந்தன்றோ புது நறுந்தளிர்! பூவும், பிஞ்சும், காயும், கனியும் கலந்த புதுமைக் காட்சியின் நிலைக்களனாவது பழந்தருவன்றி வேறியாது? பழமையை முற்றும் வெறுத்துப் புதுமையைமட்டும் போற்றுவோன், ஒரு பழமரத்தின் அடிவேரை அடிநாளில் அறக்களைந்ததை அடியோடு மறந்து, பருவத்தில் அம்மரத்தின் பயனை அவாவி அதனடியில் அங்காந்தவனோடொப்பான். பழமையைப் பெரிதும் பாராட்டிப் புதுமையை முற்றும் புறக்கணிப்போனும், அடிமரம் மட்டும் பருக்குமாறு நுனியைத் தறித்து வேனிலில் நிற்கவும் நிழல் இன்றி ஏங்கினவனோடொப்பான். "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல" என்றதன் நோக்கப், பாலும் நீரும் அளவிற் கலப்பின் வேறு பிரிந்து தோன்றாதவாறு பழமையும், புதுமையும் விரவி ஒன்றினால் ஒன்று சிறப்புறல் வேண்டுமென்பதே. ஆதலின் நம் பழந்தமிழ் வழக்காறுகள் நமது புதிய நாண்முறை வாழ்விலும் மருவி நடைபெறல்வேண்டும். தற்போதைய நம் தமிழ்ப் பொது மக்கள் நம் தாய்மொழிச் சொல் இன்னதென்றும், அயல்நாட்டவர் வாய்மொழிச் சொல் இன்னதென்றும் அறிதற்கியலாதவர்களாக இருக்கின்றனர். இவர்கள் பகலின் ஒளியும், இரவின் இருளும் இன்னதென்றுணராத பிறவிக் குருடரினும் வேறாவரோ! இவ்வாறுரைப்பது, பிறமொழிகளின் பயிற்சியைத் தடுப்பதாகாது உலகியல் அறிவிற்கு அவைகளும் பயிலற்குரியனவே.

நம்மிற் பலர், இனிய, எளிய, தூய தனித்தமிழ் உரை நடையைப் படித்துணர்வதில் தடுமாற்றமுற்று அதனை அயல் மொழியோ என ஐயுற்று விழிக்கின்றனர். இதனை இன்றே மாற்ற முயல்வது நின்றபடியே படுப்பதுபோலாம். பழைய வெட்டிரும்பால் புதிய இரும்பைப் பிளப்பதுபோல் தற்காலப் பொதுமக்களுக்கேற்ற தமிழ்

மொழி நடையைக்கொண்டே அந்நடை நாளடைவில் நடைபெறு திருக்கச் செய்தல் வேண்டும். பழந்தமிழ் நூல் உணர்ச்சி பாவித் தமிழ் மக்கள் தலையெடுத்தால்தான் இந்நாட்டில் எந்நலனும் நிலவி நிலைநிற்கும். இவ்வுறுதியை முன்னறிக்கையாக அறுதி இட்டுக் கூறு கின்றோம். இது பிற தாய்நாடுகளுக்குந் தாய்மொழிகளுக்கும் கூடப் பொருத்தமுடையதாம். ஏனெனின் தாய்மொழியின் ஏற்றமே தாய்நாட்டுப் பொது அமைதியின் ஊற்றமாம்.

இக்காலக் கலக்கத்தின் காரணம் அவ்வவர் தாய்மொழியுணர்ச்சி தளர்ச்சியுற்றமையே. நந்தமிழ் அமுதம் உயிர்த்துயரையும் உடற் றுயரையும் நீக்கும் அருமருந் தென்பதில் ஐயமில்லை. தண்டமிழ்ப் பழமையைத் தற்காலப் புதுமைக் கேற்ற பெற்றி மாற்றி நம் மக்கள் திருந்துமாறு செய்தல் சிறந்த நாட்டுத் தொண்டாம். இத்தொண் டாற்றுந் துறைகள் பலவற்றுள் வெளியீடுகள் நடத்துதல் சாலச் சிறந்த வொன்றாம். இக்கால நிலையை நினைப்பின் நம் மொழி நலங் கருதி உழைக்கும் வெளியீடுகள் எவ்வள விருப்பினும் அமையும். அவற்றைப் பொருள்கொடுத்து வாங்கிப் படிப்பதெங்ஙனம் என் றெண்ணுவோர் பலர். கல்வியையும், செல்வத்தையும் தெய்வங் களாகவேபோற்றும் நம்பால் அவ்விரண்டும் குறைந்தும், அவற்றைத் தெய்வங்கள் என்று மதியாத மேல்நாட்டினர்பால் அவை நிறைந்து சிறந்தும் விளங்குவது பிறர் பெரு நகைப்பிற்கிடமன்றோ! அவர் கட்கு அவ்வளவு செல்வமும் கல்வியும் எங்கிருந்து சென்று குவிகின்றன! உய்த்துணர்மின்!

இயற்கை ஒன்று பலவாய்ப் பல்கிப் பெருகி வளர்வதே இறை வன் திருவுளம். இயற்கை நலன் யாவும் குன்றாத நம் நாடு தன்னிலை யில்முன்னையினும் பின்னிற்பதேன்? அன்றிருந்த ஞாயிறுந்,திங்களும் இன்றெங்குச் சென்றன? அன்றியும், நிலம், நீர், நெருப்பு, வளி, விசும்பு என்னும் ஐம்பெரும் பொருள்களும் அன்றும், இன்றும் வெவ்வேறாயினவோ! மற்றி யாதுபற்றி நாம் இந்நிலை எய்தி இன்னலை அடைகின்றோம். தற்போது மக்களீட்டம் முன்னையினும் பல்கியது உண்மையே. எனினும், நாம், நம் வாழ்க்கைத் துறைகளையும், ஒழு க்க முறைகளையும் அயல் நெறிகளுக்குப் பறிகொடுத்துப் பழமையை மறந்து புதுமையிற் புகுந்த இஃதொன்றே நம் குறைபாடுகள் அனைத்தினுக்கும் முதற் காரணம். பழமையில் நமக்குத் தாய்மொழி மேல் இருந்தபற்று மீண்டும் புதுப்பிக்கப் பெற்றால்தான் நாம் முன் போல் இன்புற்று வாழலாம்.

இவ்வினிய முயற்சியை மேற்கொண்ட நம்மரிய தமிழணங்கை அனைவரும் ஆதரிப்பார்களாக!

ஆசிரியன்.

தமிழணங்காசிரியர் பாட்டனூர் முருகேச முதலியார் எனப்பெயரிய
ஆரணி ஆனைகட்டி அவல்தார்

முனிசாமி முதலியார் அவர்கள் இயற்றிய

பொருள் விளக்க நிகண்டு.

154-ம் பக்கத் தொடர்ச்சி.

புகார் என்பது:—

ஓரூர் காவிரிப்பூம் பட்டினத்திற்கும் (பிங் 474)
கழிமுகம் சங்கம ஸ்தானத்திற்கும் (பிங். 586)
கபிலவண்ணம் கபில நிறத்திற்கும் பேர்.

அகாதம் என்பது:—

நீந்திடுபுனல் நீந்தக்கூடிய நீருக்குப் பேர். (பிங். 78)

அகாத்தியம் என்பது:—

பொல்லாங்கு பொல்லாங்கிற்கும்
வஞ்சம் வஞ்சனைக்கும் பேர்.

நகாயுதம் என்பது:—

சிங்கம் சிங்கத்திற்கும் (அரு. க. 33)
சேவல் ஆண் கோழிக்கும்
நாகம் குரங்கிற்கும் (அரு க. 33)
புலி புலிக்கும்
எண்கு கரடிக்கும் பேர். 13

14. உகம்யுகம் துயம்நாள் பாம்பு முலகுமுற் றொடு தலைப்பா
பகம்மகத் துவமேர் வாலம் பகம்குய்யம் காந்தி முத்தி
சகம் செச்சை பாதிபூமி சட்டைமார் கழிமாதப்பேர்
யுகம் நுகம் உபயம் பூமி யோர்காலத் தளவையாமே.

உகம் என்பது:—

யுகம் கால அளவைக்கும் (பிங். 307)
துயம் இரண்டிற்கும் வே.
நாள் தினத்திற்கும் ,,
பாம்பு பாம்பிற்கும் ,,
உலகு உலகத்திற்கும் ,,
முற்று முடிவிற்கும் ,,
தலைப்பா தலைப்பாட்டிற்கும் பேர். (சிலப். 342)

பகம் என்பது:—

மகத்துவம் மான்மியத்திற்கும்
ஏர் அழகிற்கும்
வாலம் வால் மயிருக்கும் (அரு. க. 4)
பகம் சொக்கிற்கும் (அரு. க. 4)
குய்யம் பெண் குறிக்கும்
காந்தி பிரகாசத்திற்கும்
முத்தி மோட்சத்திற்கும் பேர்.

சகம் என்பது:—

செச்சை வெள்ளாட்டிற்கும்
பாதி அரைப் பங்கிற்கும்
பூ உலகத்திற்கும் (அரு. க. 4)
சட்டை சட்டைக்கும்
மார்கழி தனுர் மாதத்திற்கும் பேர்.

யுகம் என்பது:—

நுகம் நுகத்தடிக்கும் வே.
உபயம் இரண்டிற்கும் ,,
பூமி உலகத்திற்கும் ,,
ஓர் கால அளவை } ஒரு கால அளவிற்கும் பேர். 14

15. முகரமே காகஞ்சங்கம் உகளமன் பிரண்டுதாவல்
இகுளைகேள் தோழிநட்பாம் இகாஞ்சாங் திகர மேயாம்
வகிருதல் பங்குசெய்தல் வகைப்படக் கோதல்போழ்தல்
சகலனோர் குடிப்பெண்கொண் டோன்சாற்று மூவிதத்
[தோரான்மா.

முகரம் என்பது:—

காகம் காக்கைக்கும்
சங்கம் சங்கிற்கும் பேர்.

உகளம் என்பது:—

அன்பு அன்பிற்கும் } அரு க 11
இரண்டு இரண்டிற்கும் }
தாவல் தாவுதலுக்கும் பேர். (புறநா. 15)

இகுளை என்பது:—

கேள் சுற்றத்திற்கும் }
தோழி பாங்கிக்கும் } (பி. 3157)
நட்பு நேசத்திற்கும் பேர் }

இகரம் என்பது:—

சாந்து சந்தனத்திற்கும்
இகரம் இராக்கரத்திற்கும் பேர் } அரு. க. 22

வகிருதல் என்பது:—

பங்குசெய்தல் பங்காக்கலுக்கும்
கோதல் கோதுதலுக்கும்
போழ்தல் பிளத்தலுக்கும் பேர்.

சகலன் என்பது:—

ஓர் குடிப்பெண் கொண்டோன் } ஒரு தாய்வயிற்றுச் சோதரிகளின் கணவனுக்கும்
மூவிதத்தோரான்மா ஆன்மாக்களின் பிரிவு மூன்றில் ஒன்றுக்
சைவாகமப்படி ஆன்மா:— [கும் பேர்.
விஞ்ஞானகலர்
பிரளயாகலர்
சகலர் என மூன்று வகைப்படும். 15

16. அகற்றலே விரித்தனீக்கல் அகணியுள் மருதம் செய்யாம்
இகத்தலே நடைபொறுத்தல் இகழ்ச்சியே மறதியீனம்
உகுத்தலே சொரிதல்சிந்தல் உதிர்த்திடல் விடுத்தல்போடல்
பகுத்தலே தறித்தலீதல் பங்கிடல் வெட்டலாற்பேர்.

அகற்கல் என்பது:—

விரித்தல் விரிவாக்கலுக்கும் (புறநா. 53) புறப். 108.
நீக்கல் நீக்குதலுக்கும் பேர்.

அகணி என்பது:—

உள் உட்புறத்திற்கும்
மருதம் மருதநிலத்திற்கும்
செய் கழனிக்கும் பேர் } வேத.

இகத்தல் என்பது:—

நடை நடத்தலுக்கும்
பொறுத்தல் தாங்குதலுக்கும் } பி. 3155

இகழ்ச்சி என்பது:—

மறதி மறத்தலுக்கும்
ஈனம் ஈனத்திற்கும் பேர். } வே.

உகுத்தல் என்பது:—

சொரிதல் கொட்டுதலுக்கும் } வே.
சிந்தல் சிந்துதலுக்கும் }
உதிர்த்திடல் உதிரச் செய்தலுக்கும் (புறநா. 13)
விடுத்தல் விட்டுவிடுதலுக்கும்
போடல் எறிந்திடலுக்கும் பேர் (மலை. 148)

பகுத்தல் என்பது:—

தறித்தல் துண்டாக்குதலுக்கும் (அரு. க. 42)
ஈதல் கொடுத்தலுக்கும்
பங்கிடல் பங்காக்குதலுக்கும் ,,
வெட்டல் வெட்டுதலுக்கும் பேர். 16

17. பகர்தலே விற்றல் பேசல் பகன்பகாசூரன் என்றாம்
பகட்டதட் டேவல் தந்த்ரம் பயமுறுத்தீடு வேடம்
முகப்பேற்பு முன்னிறப்பு மொள்ளலாம் முகில்திரள்மால்
அகவல்பா இகுத்தலாடல் அணிமயிற் குரலொலித்தல்.

பகர்தல் என்பது:—

விற்றல் விலைப்படுத்தலுக்கும் } அரு க 13.
பேசல் பேசுதலுக்கும் பேர். }

பகட்டு என்பது:—

அதட்டு அதட்டுதலுக்கும்
ஏவல் பகட்டெனும் ஏவலுக்கும்
தந்திரம் உபாயத்திற்கும்
பயமுறுத்து பயங்காட்டலுக்கும்
ஈடு பெருமைக்கும் (பி. 2225 பெரும்பா. 243)
வேடம் வேஷத்திற்கும் பெயர்.

முகப்பு என்பது:—

ஏற்பு ஏற்றுக்கொள்ளலுக்கும் (புறப்பொ. $\frac{1}{2}\frac{1}{2}$ $\frac{2}{1\,2}$)
முன் முற்றத்தினுக்கும்
இறப்பு வீட்டினிறப்பினுக்கும்
மொள்ளல் முகத்தலுக்கும் பேர்.

முகில் என்பது:—

திரள் திரளுக்கும் } பிங் 3968
மால் மேகத்தினுக்கும் பேர். }

(தொடரும்)

தமிழர் தனி மாண்பு.

வித்வான் ஔவை சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள்,
தலைமைத் தமிழாசிரியர், போர்டு ஹைஸ்கூல், செங்கம்.

இவ்வுலகத்தில் மக்கள் தோற்றத்தைப்பற்றிய அறிவு, நமது தாய்நாட்டில்தான் உதயமாகிறது. ஆதியில் தோன்றிய காக்கேசியர், மங்கோலியர், நீக்ரோவர், தமிழர் என்போருள், தமிழரே முதலில் தோற்றம் பெற்றவர். இவர்கள் வாழ்ந்த நிலப்பாகம் பாதிக்குமேல் கடலால் விழுங்கப்பெற்றது. கெக்கல் (Kakkal) என்னும் பண்டிதர், அக்கடல் கொண்ட பாகமே மக்களது சீர்திருத்தத்திற்குத் தோற்றுவாயாகிய இடம், என்று கூறுகிறார். இப்போது வழங்கும் ஜாவா, போர்னியோ, செலிபஸ் முதலியவை, அந்நாட்டுக்கீழைப் பகுதிகளாகவே இருத்தல் வேண்டும். தமிழர் கோயில் போன்ற சமய நிலையம் முதலியன அங்கே காணப்படுகின்றன. இப்பெருநாடே மக்கட்கு ஆதியிடமாதல் வேண்டும் என்று கீன் (Keen) என்னும் பெரியார் எழுதுகின்றார். இனி, இமவான் மகளை இறைவன் மணம் செய்துகொண்ட காலையில், வடதிசை தாழ, தென்திசை உயர்ந்துவிட, அவற்றைச் சமன்செய்ய வேண்டி, குறுமுனியைப் பரமன் தென்னாட்டிற்குச் செல்லுமாறு பணித்தனர். அப்போது, அக்குறுமுனி, "அந்நாட்டு மக்கள் தமிழர்; அவர் தமிழில் வல்லுநர்; அவர் கேட்கும் வினாக்கட்கு விடை கூறல்வேண்டும்; அதனால் எனக்குத் தமிழ் கற்பிக்கவேண்டும்" என்றனர். இதனால் தமிழர் மிகப் பழைய காலத்தேயே சிறந்த தொன்மைபெற்று வாழ்ந்தவர் என்பது விளங்கா நிற்கின்றது.

இனி, தமிழரது வாழ்க்கை, மொழி, கடவுட் கொள்கை என்பவற்றைச் சிறிதே ஆராய்வாம். பண்டைத் தமிழர், அரசு, கைத்தொழில், வாணிபம் முதலியவற்றில் சிறந்து விளங்கினார்கள் மற்றை நாட்டு நாணயங்கள் பல நமக்குத் தற்போது அகப்படுவதனால், இவர்கள் அயல்நாட்டாரோடு வியாபாரம் செய்திருப்பவர் என்று ஊகிப்பதற்கு ஒரு தடையும் இல்லை. தமிழரின் முக்கியமான கைத்தொழில் நெசவு. அவர்கள் அதன்கண் கைதேர்ந்திருந்தனர் என்பது, "புகை முகந்தன்னமாசில் தூவுடை" "நுரைகுவிந்தன்ன பூந்துகில்," "பூங்கரை நீலம்" "கொட்டைக்கரைய பட்டுடை"

182

என வருவனவற்ருல் நன்கு தெரிகிறது. வாய்மை, அருள், ஒப்புரவு, (உலகநடை,) முயற்சி முதலிய பண்புகளில் பண்டைத்தமிழ் நன்மக்கள் சிறந்து விளங்கினர்.

இத்தமிழரது மொழி தமிழ். இம்மொழியும் இவரேபோல் மிக்க தொன்மை வாய்ந்தது. கிரீக், லத்தின், சமஸ்கிருதம் முதலிய மொழிகளைப் பார்க்கிலும் மென்மையும் திட்பமும் உடையது என்று டாக்டர் வின்ஸ்லோ (Dr. Winslow) என்பவர் கூறுகின்ருர். பெர்சிவல் (Rev. Percival) என்னும் பாதிரியார், "ஒரு மொழியும் தமிழைப்போலச் சுருக்கமும் ஆற்றலும் ஒருங்கே சேரப் பெறவில்லையென்று தோன்றுகிறது; பிற எந்த மொழியும் மக்கள் மனக் கருத்தை விளக்குவதில் அத்துணை அறிவு நுட்பமும், செறிவும் உடையதன்று" என்று எழுதியிருக்கின்ருர். டாக்டர் கால்டுவெல் (Dr. Caldwell) என்பார் "தனித்தியங்கும் ஆற்றலில் தமிழ்மொழியே பிற திராவிட மொழிகள் யாவற்றிலும் மிகச் சிறந்தது" என்று கூறுகின்ருர். பிற மொழிகள் தோன்றிக் காலந்தோறும் வேறு வேறு உருமாற்றம் அடைந்துவரத் தமிழ்மொழி மட்டில் தோன்றிய அன்றுமுதல் இன்றுவரை ஒரு மாதிரியாகவே இருந்துவருவது ஒன்றே இதன் ஏற்றத்துக்குப் போதிய சான்று பகருகின்றது.

தமிழர் கடவுளிடத்தில் மிக்க அன்புடையவராவர். கடவுளிடத்தில் அன்பு பூண்டு பல விநோதங்களைச் செய்துள்ளார்கள். எலும்பைப் பெண்ணுக்கியும், முதலையுண்ட பாலனை அழைத்தும், பரமனைத் தூது செலுத்தியும், மறைக்கதவினைத் திறந்தும் அதிசயங்கள் பல செய்தவர்கள் நம் தமிழ்நாட்டு நாயன்மார்களே ஆவர்.

நாடகங்கள் எழுதுதலில் தமிழர்கள் பின்வாங்கினவர் அல்லர். சுந்தரம் பிள்ளை எழுதிய மனோன்மணீயம், சூரிய நாராண சாஸ்திரி எழுதிய மான விஜயம், இளங்கோ அடிகள் எழுதிய சிலப்பதிகாரம் முதலிய யாவும் சீரிய நாடகங்களாகவே விளங்குகின்றன.

மேற்கூறியவற்ருல் தமிழர் தொன்மையும், மொழிநலனும், வாணிபச் செப்பமும், அரசியல் பெருமையும், கடவுள் அன்பும் மிக விளங்கப் பெற்றவர் என்பது ஒருவாறு விளக்கியவாருயிற்று.

சிறு முயற்சியிற் பெரும்பயன்.

ஆரணி திரு. V. சந்திரநாத நைனார் அவர்கள்
ஆசிரியர், ஹிந்து ஆரம்பப் பாடசாலை, ஆம்பூர்.

நம் நாடு, சுமார் ஏழு லட்சம் கிராமங்களைக் கொண்டது என்பர். மற்றெந் நாட்டிற்குமில்லாத எல்லா வளங்களையும், சிறப்பியல்களையும் இயற்கையாகவே பெற்றுளது. பொன்போன்ற மூலப் பொருள்கள் புதைந்து கிடக்கும் சீரிய பெற்றிமையுடையதாகும். குளிர்மிகுந்த ஐரோப்பாக் கண்டத்தில் விளையும் பயிர்களையும், பெங்களூர், நீலகிரி போன்ற இடங்களில் பயிர் செய்வதை யாவரும் அறிவோம் இவற்றை யறியாது நம் மக்கள் தங்கள் தினசரி வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருள்களுக்கு அயல்நாடுகளின் ஆதரவு தேடி வறுமைக்குள்ளாவதுடன் உயிர்நலம்,உடல்நலம் யாவற்றையும் கொள்ளைகொடுக்கின்றனர். இதற்குக் காரணம் மேல்நாட்டு இயந்திர பூதங்கள் பெருகியதால் நாட்டுக் கைத்தொழில்கள் சீரழிந்தன வென்பது வெள்ளிடைமலை. எனினும்,

'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனைசெய்வோம்—வீணில்
உண்டுகளித்திருப்போரை நிந்தனைசெய்வோம்.'

என்று தேசிய வீரபாரதியார்கூறும் அறிவுரையை அகத்திலமைத்து, ஒவ்வொருவரும் ஒரு தொழிலியற்றுவது இன்றியமையாததாகும்.

கீழ்நாட்டு மக்களாகிய ஜப்பானியர் எந்நாட்டினரும் கண்டு வியக்கும்படி அரசியலிலும், பொருளாதாரத்திலும் மேன்மையுற்றதற்குக் காரணம் கைத்தொழிலின்மூலம் வியாபாரத்தைப் பெருக்கினதென்பதை யாவரும் உய்த்துணரல் வேண்டும்.

இக்காரணம்பற்றியே நம் நாட்டின் நலங்கருதுவோர் நாட்டுக் கைத்தொழிலையும், நாட்டுப் பொருள்களையும் ஆதரித்தலைப்பற்றி மக்களுக்கு அறிவுறுத்துகின்றனர்.

தினசரி வாழ்க்கைக்குரிய மிகவும் குறைந்த செலவில் ஆகக் கூடிய பொருள்களைச் செய்வகை யறிந்து செய்தால் மிகுந்த பயன் விளையும். அவற்றுள் சிலவற்றை ஈண்டுக் கவனிப்போம்.

1. காகித உறை:—

தபால் உறை ஒன்றை ஒழுங்காகப் பிரித்து ஒரு மெல்லிய அட்டை அல்லது தகரம்போன்ற பொருளின்மீது விரித்துப் பென்சிலினால் சுற்றுக் கோடு இழுத்து அடையாளம் செய்தபிறகு கத்தரித்து ஒரு முழு (Foolscap sheet) காகிதத்தை நான்கு பாகமாக மடித்து, அதை அதன்மீது வைத்துச் சுற்றுக்கோடு வரைந்து கத்தரிக்கவும். பின் மடித்தல், பிசின் தடவுதல், ஒட்டுதல் என்பவற்றை முறையே செய்யவும். ஒரு முழுக் காகிதத்திற்கு நான்கு உறைகள் தயாரிக்கலாம்.

184

2. காகிதக் கூடை:—

சூரிய வெளிச்சத்தில் பித்தளைக் குடம்போன்ற சாமானைக் கவிழ்த்து அதன்மேல், குப்பையில் எறியும் உபயோகமற்ற காகிதங்களைச் சாதம் வடித்த கஞ்சி நீரின் உதவியால் ஒன்றன்மேல் ஒன்றாக வேண்டிய அளவுக்கு ஒட்டி ஒரு வாரம் அல்லது பத்து நாளைக்கு உலர வைக்கவும். பிறகு அதன் மேலும், உள்ளும் உறுதியான காகிதத்தைப் பிசினால் ஒட்டிச் சுத்தமாகவும் ஒழுங்காகவும் தயாரிக்கச் சிறந்த கூடையாகும். இது எளிய முறையாம். (காகிதங்களை ஊறவைத்து இடித்து வெந்தயம், மயில்துத்தம் முதலியவற்றைக் கலந்து உரலில் இட்டு மசித்து இவ்விதமே வேண்டியபடி செய்யும் முறையும் ஒன்று உண்டு).

3. நூல்வலைப் பைகள்:—

பஞ்சியில் கொட்டை எடுத்துச் சுத்தம்செய்து பட்டை போட வேண்டும். பிறகு தக்ளியின் உதவியால் நூற்ற நூலைக்கொண்டு, வேண்டிய நீளத்திற்கு மெல்லிய பலகை அல்லது கனமான அட்டையில் ஒன்றரை அல்லது இரண்டு அங்குல அகலத்திற்கு இடுப்பில் கட்டும் பட்டை, நாடா முதலியவைகள் தயாரிக்கலாம். தவிர நூற்ற நூலைப் பல இழைகள் ஒன்று சேர்த்து முறுக்கி, சாயமிட்டு, வலைப் பைகள், குழந்தைகளின் ஏணைகள்போன்ற மிகப் பயனுள்ள சாமான்கள் செய்யலாம்.

4. பற்பொடி:—

வேண்டிய பொருள்கள்:— (1) படிகாரம் 8 பங்கு எடை (2) பளிங்கு சாம்பிராணி (3) மிளகுத் தூள் (4) உப்புத்தூள் முறையே 2 பங்கு எடை (5) வேலம்பட்டைக் கரித்தூள் 2 பங்கு எடை அல்லது சீமைச் சுண்ணாம்புத் தூள் 1 பங்கு எடை.

செய்வகை:—ஒரு வாய் அகன்ற மட்பாண்டத்தில் படிகாரத்தைப் பொரித்துப் பொடிசெய்க. மேலே கூறிய நான்கு வஸ்துக்களையும் தனித்தனியே பொடிசெய்து வஸ்திரகாயம்செய்து அளவின்படி சேர்க்கச் சிறந்த பற்பொடியாகும். உப்பைமாத்திரம் சிறிது வறுத்துப் பொடிசெய்து சேர்க்கவும். இல்லாவிடில் சில நாட்களில் பற்பொடி புளித்துவிடும். சிறு பாக்கெட்டுகளாகவும் செய்து விற்கலாம்.

5 எழுதும் மை:—

வேண்டிய பொருள்கள்:—(1) கடுக்காய் 5 அவுன்ஸ் (2) மாசிக்காய் 5 அவுன்ஸ் (3) காசிக்கட்டி 1 அவுன்ஸ் (4) அன்னபேதி 2 அவுன்ஸ் (5) பிசின் ½ அவுன்ஸ்.

செய்வகை:—இங்குக் கூறிய பொருள்களைத் தனித்தனி நன்றாகப் பொடிசெய்து ஒன்றாகச் சேர்க்கவும். பிறகு வெய்யலில் நன்கு காய வைத்து ஒரு தகர மூடியில் மூடி வைக்கவும். வேண்டும்போது சிறிது பொடி எடுத்து வெந்நீரில் போட்டுக் கலக்கச் சிறந்த கரிய (Ink) எழுதும் மை ஆகும்.

(தொடரும்)

185

ஒட்டக்கூத்தர்.

திருவத்தியூர் வித்வான் T. S. தேவசேனுபதி தேசிகர்
தமிழாசிரியர்
ஸ்ரீ மகந்து உயர்நிலைப்பள்ளி, வேலூர்.

142-ம் பக்கத் தொடர்ச்சி.

இனி, ஊழிக் காலத்தில் ஆழியில் மிதக்கும் காழிநகர் கூத்தர் பிறப்பகம் ஆமோ வெனின், அன்று. விநோதமாக மேற்குறித்த செய்யுளைப் பாடவந்த ஒரு புலவர் கூத்தரைமட்டும் நேரியமுறையில் ஊரின் பெயரால் கூறினர் என்றல் எவ்வாற்ருனும் ஒவ்வாக் கூற்ரும்.

"கம்பன் என்றும் கும்பன் என்றுங்
காளி ஒட்டக் கூத்தன் என்றும்"

எனப்பாடம் இருப்பதால் கூத்தரும் காளிஎன்ற விநோத அடையே கொடுக்கப்பெற்ருர் எனக் கொள்ளல் தள்ளற்பாலதன்ரும் அன்றியும் இலகும் செந்தமிழ் இலக்கிய உலகில் காழி ஒட்டக்கூத்தர் எனும் வழக்காறு இதுகாறும் இருந்ததாகக் காண்கிலேம். ஆதலின் இஃதும் ஒவ்வாக் கூற்றென்றே ஒதுக்குவோம்.

இனிக் கூத்தனூர் கூத்தர் பிறப்பகம் ஆமோ எனின், அஃதும் அன்று. இப்புலவர் கூத்தனூரில் தவங்கிடந்து கலைமகள் அருள் பெற்று வரகவிபாடும் வன்மையுற்றதனுல் இவரைப் பெரிதும் போற்றிய விக்கிரமசோழன் இவ்வூரை அப்புலவர்பிரானுக்கு முற்றாட்டாகக் கொடுத்தான். அதோடல்லாமல் இப்புலவர் புகழ் நிலவி நிற்க நிலமிசை ஒங்கும் கலைமகள் கோயிலும் ஒன்று நிறுவினன் என்று தக்க சான்றுகள் சாஸன வாயிலாகக் கேட்கப்படுதலின் இதுவும் பொருந்தாக் கூற்றென்றே புறக்கணிப்பாம். "மலரிவரும் கூத்தன்றன் வாக்கு," என்றதைக் கொண்டு சேதுநாட்டின் கண்ணுள்ள மலரி என்ற இடமே கூத்தர் பிறப்பகம் என்பாருடைய கூற்றை ஆய்வோம். இவ்வெண்பாவின் கருத்து "செவியளந்து சிந்தையுள்ளே சென்று மிகப்பேர் இன்பம் நல்கும் வாக்குடையார் கூத்தர்" என்பது. இதனுல் கூத்தப் புலவரின் புலமைத் திறமும், நாவின் நலமும், கல்லும் கனியும் கவியின் சுவையும் புலனும். மலரி என்றது

கூத்தர் பிறப்பகமாகலாம். ஆனல் சேதுநாட்டின் கண்ணதோர் ஊர் என்றல் பல்லாற்ருனும் சிறந்து நில்லாக் கூற்றென்றே நினைக் கின்ருேம்.

இப்புலவர்பிரான் தோன்றியது ஈண்டிய புகழ்ப் பாண்டி நாடாயின், பாண்டி மன்னரைச் சார்ந்து வதிதல் செய்யாது சோழர் அவையை அலங்கரித்தது யாது காரணம்பற்றி என்ற வினவிற்கு விடை இறுக்குங்கால் மிகவும் விழிக்க நேருகிறது. ஆதலின் இவர் சோழநாட்டினர் என்ற முடிவிற்கு வரவேண்டி இருக்கிறது. எனவே மலரி எனப் பெயரியதோர் ஊர் சோழ வளநாட்டுப் பண்டு உண்டு என நினைக்கவேண்டி இருக்கிறது. அந்நினைவிற்கேற்ற சான்றுகள்:—

"பாண்டிகுலாசனி வளநாட்டு மீக்கோழை நாட்டிலே ஸ்ரீகண்ட சதுர்வேதி மங்கலமான மலரி,"

என 1914ம் ஆண்டில் வெளிவந்த திருஎறும்பியூர்க் கல்வெட்டறிக்கையும்,

"ஸ்வஸ்திஸ்ரீ சரசுவதி தேவியை எழுந்தருளுவித்தார் இவ்வூர் (நஞ்சை) 20.....ம் காணியுடைய மலரி உடையார் இந்தக் கவிச் சக்ரவர்த்திகள் பேரனார் கவிப்பெருமாளான வரதக்கூத்தன்,"

எனக் கூத்தனூர் சரசுவதி பீடக் கல்வெட்டறிக்கையும், காணப் படுதலின் பல்லாற்ருனும் எல்லா இயைபும் புல்லா நிற்கும் இக்கூற் றையே கொள்ள ஒருப்படுகின்றது எமதுள்ளம்.

எனவே மலரி என்றது சோணாட்டின் கண்ணதோர் ஊர் என்றும், அதுவே காலாந்தரத்தில் மணக்குடி என வழங்கப்பெற்றது என்றும் நினைப்பது தவருகாது. அன்றியும்,

"மணமமரும் கூந்தலார் மாதர் நோக்கொன்று
மணவை வரும் கூத்தன்றன் வாக்கு"

எனவரும் பாடமும் இக்கொள்கையை வலியுறுத்தும். ஆதலின் இதுகாறும் ஆய்ந்ததன் பயனாகக் கூத்தர் பிறப்பகம் மலரி என்று வழங்கப்பெற்ற சோணாட்டில் உள்ள மணக்குடி என்றே எண்ணு கின்ருேம்.

(தொடரும்)

187

உள்ளமும் வாழ்க்கையும்.

திரு. N. B. இராமலிங்கம் B. A;
Accountant copying branch P. M. G. Office, Madras.

169-ம் பக்கத் தொடர்ச்சி.

Mr. James Allen என்னும் அங்கிலப் புலவர் எழுதிய **Out from the heart** என்னும் கட்டுரையைத் தழுவிய மொழி பெயர்ப்பு.

செய்தலும் அறிதலும்.

வாழ்க்கை மனத்திலிருந்து உண்டாகிறதென்றும், மனம் பல வழக்கங்களின் கோர்வையென்றும் நாம் அறிந்தோம். பொறுமை யான முயற்சியால் மனத்தை ஒழுங்குபடுத்த முடியுமென்றும் நாம் அறிந்தோம். வாழ்க்கையின் கஷ்டங்களெல்லாம் உள்ளத்தின் வளர்ச்சியே யாகுமன்றிப் புறம்பே உண்டாகுபவை அல்லவென்றும் அறிந்தோம்

தினந்தோறும் குற்றமற்ற எண்ணங்களேயே சிந்தித்தல்வேண்டும். சன்மார்க்க வாழ்க்கையை விரும்புபவன் பொறுமையாக மனத்துடன் போராடல்வேண்டும். இப்பெரிய வேலையில் சுலபமான தாழ்ந்த படிகளிலிருந்து உயர்ந்தபடிகளை அடையல்வேண்டும். வேதாந்த விஷயங்களைப் படிப்பதினுல் மட்டும் உயர்ந்த வாழ்க்கையை அடைதல் முடியாது. உயர்ந்த வாழ்க்கையென்பது நினைவுகளிலும், வார்த்தைகளிலும், செய்கைகளிலும் உத்தமமாய் இருத்தலாம். சன்மார்க்கத்தை அதிகநாள் பயின்றபின்னரோ ஆத்ம ஞானத்தை அடையக் கூடும். ஆதலால் பயிற்சியே முதன்மையானது.

உத்தம வாழ்க்கையின் முதற்படிகள்.

ஆத்ம பரிபூரணத்தையடைய முதல் பாடங்கள் யாவை?

I. தேகத்தால் செய்யக்கூடிய குற்றங்கள்:— முதல் பாடம்.

1. சோம்பல்
2. பெருண்டிப் பிரியம்

} தேகப் பயிற்சி.

II. நாக்கினுல் செய்யக்கூடிய குற்றங்கள்:— இரண்டாம் பாடம்.

1. தூஷித்தல்
2. வீண் பேச்சு
3. கொரூரமான வார்த்தைகள்
4. ஆலோசனையில்லாத பேச்சு
5. புறங்கூறுதல்(அ) குற்றஞ்சாற்றுதல்

} பேச்சுப் பயிற்சி.

MAHAMAHOP

III. பழக்கம் செய்யவேண்டியவைகள்:—

1. பற்றற்றுத்தன் கடமைகளைச் செய்தல். 2. சலிக்காத நேர்மை. 3. அளவற்ற மன்னிப்பு.

தேகத்தால் செய்யக்கூடிய குற்றங்களும், நாக்கினால் செய்யக் கூடிய குற்றங்களும் உள்ளத்திலிருந்தே எழுகின்றன. உள்ளத்தின் தீய நிலைமையே தேகத்திலும் நாக்கிலும் வெளிப்படுகின்றன. நேர்மை யான சன்மார்க்க வாழ்விற்கு இந்த நிலைமைகளை மாற்றல்வேண்டும்.

ஆனால் இவைகளை எவ்வாறு அகற்றுவது? முதலில் அவை களின் வெளித் தோற்றத்தைத் தடுத்தல்வேண்டும். நாம் அதைத் தடுக்க முயலும் ஒவ்வொரு சமயத்திலும் உள்ளம் அதன் தீங்கை அறிந்து நிராகரிக்கும்.

மனப் பயிற்சிக்கு முதலில் சோம்பலை ஒழித்தல்வேண்டும். அதிக சௌகரியத்தையும் தூக்கத்தையும் தேகத்திற்கு அளித் தல்; காலந் தள்ளுதல்; உடனே செய்யவேண்டிய காரியங்களைக் கவனிக்காமல் நிராகரித்தல் முதலியன சோம்பலின் பாற்படும்.

சோம்பலை ஒழிக்கும் விதம்:—

அளவாக நித்திரைசெய்து அதிகாலையில் எழுந்திருத்தல். சுறுசுறுப்பாகவும், உற்சாகமாகவும் தன் வேலையைக் காலத்தோடு செய்தல். படுக்கையிலிருந்துகொண்டே ஆகாரமாவது, தாகசாந்தி யாவது செய்தல்கூடாது. விழித்துக்கொண்டே படுக்கையிலிருந்து மனோராச்சியம் கட்டுதல் கூடாது. படுக்கையில் ஆலோசனை செய்தல் கூடாது. ஏனெனில் அந்த நிலைமையில் பரிசுத்தமான பலத்த யோசனை ஒன்றும் ஏற்படாது.

பேருண்டிப் பிரியமாவது:—

உண்பதன் கருத்தை யறியாமல் மிருக திருப்திக்காகச் சாப்பிடு வது; தேகத்திற்கு அவசியம் எவ்வளவோ அதைவிட அதிகமாக உண்ணல்; உயர்ந்த தித்திப்புப் பண்டங்களின்மீது பேராசையுறல்.

பேருண்டியை ஒழிக்கும் விதம்:—

அதிகமாக சாப்பிடும் அளவையும் சாப்பிடுகின்ற தடவை களையும் குறைக்கவும். எளிமையான ஆகாரத்தைக் குறித்த நேரத்தில் சாப்பிடல்வேண்டும். மற்றநேரங்களில் ஒன்றும் உண்ணல் கூடாது. இராப்போஜனம் கூடாது; ஏனெனில் அவைகள் அவசிய மில்லை. அவைகள் அதிக தூக்கத்தையும் மனக் கலக்கத்தையுமே உண்டாக்குகின்றன. பரிசுத்த மனத்திற்கு ஒத்த ஆகாரத்தைத் தேர்ந்தெடுத்து உண்ணல் வேண்டும். (தொடரும்)

சாந்துணையும் கல்லாதவாறு.

திரு. மு. வரதராஜ முதலியார் அவர்கள் **B.O.L.**

Lecturer in Oriental Studies Pachayappa's College.

குறிப்பு:— இக்கட்டுரையாளர் அவர்களே வித்வான் தேர்தலில் முதன்முதலாக முதன்மையில் தேறி 1000 ரூபாய் முதற்பரிசு பெற்ற நமது ஜில்லாவின் முதற் புலவராகத் திருப்பத்தூர் முனிஸிபல் ஹைஸ்கூலில் தலைமைத் தமிழ்ப்புலமை நடாத்தினர் ஆவார்கள். (ஆசிரியன்)

கேடில்லாத விழுச்செல்வம் கல்வி. அச்செல்வத்தைத் தேடும் பேறு மக்கட் பிறவிக்கே உண்டு. ஆயினும், மக்களாய்ப் பிறந்தாருள்ளும் அச் செல்வத்தினைப் பெற்று வாழ்வோர் மிகச் சிலராகவே உள்ளனர். காரணம் என்னை? மக்களுள்ளும் மாக்கள் உண்டு. மாக்கள் அல்லாத மக்களுக்கே கல்விச் செல்வம் உரியது. அதுபற்றியன்றோ, திருவள்ளுவர், கற்றவர் மக்கள் என்றும் மற்றவர் விலங்குகள் என்றும் கருத்துப்பட

> "விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
> கற்றாரோ டேனை யவர்"

என்றார்.

மக்களாக்கும் சிறப்பு வாய்ந்த அக்கல்வியைப் பயிலாது வாழ்நாளைக் கழிப்பவரைக் குறித்துச் சான்றோர் பலர் பலவாறு நொந்து கூறியுள்ளனர். உலகிற்குரிய ஒருவராய்த் தமிழகத்தில் தோன்றிய வள்ளுவரோ, "இளமையில் கற்றல் வேண்டும்; அவ் விளமையில் கல்வியில் தலைப்படாதவர், இளமை கழிந்த பின்னரேனும் கழிவிரக்கங்கொண்டு, கற்றலின் சிறப்பை உணர்ந்து கற்க முன்வந்திலரே! அந்தோ! முதுமையும் வந்துவிட்டது! சாக்காடு நெருங்கிடுமே! தாம் ஆன்றவிந்தடங்காவிடினும், தம் மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம் பொறியும் அடங்கத் தொடங்குகின்றனவே! இந்நிலையினும் தம் தவறு உணர்ந்திலரே! கல்வியின் பயனை உணராமையாலன்றோ இந்த இழிநிலையில் உள்ளனர்! எழுமையும் ஏமாப்புடைய சிறப்பு நிற்க, இம்மையில் இன்புறும் பயனும் அறியாரோ? 'எந்நாட்டினும்

எமக்கு நல்வாழ்வு உண்டு; எவ்வூரினும் எமக்கு நல்வாழ்வு உண்டு' என்னும் பெருமையைக் கல்வியன்றே தரவல்லது! அதனையும் உணராமல் சாந்துணையும் கல்லாது கழிகின்றனரே" என்று வருந்தியுரைத்தார்.

கல்வியை இடையறாது கற்றலினும் இன்பம் பிறிதில்லை. இவ்வுண்மை, கற்றலே தொழிலெனக் கொண்டு வாழ்ந்து அறிவு பழுத்த ஆன்றோர் கண்டதாகும். நல்லவர் கூட்டுறவு இன்பந்தருவது என்பதைக் கூறவந்த தமிழ்மறை அதனை ஓர் உவமை கூறி விளக்குகின்றது. உவமை பொருளினும் சிறந்ததாக இருத்தல் வேண்டும் என்பது இலக்கணம்.

> "நவில்தோறும் நூல்நயம் போலும் பயில்தோறும்
> பண்புடை யாளர் தொடர்பு"

என்னும் குறளில், பண்புடையாளர் தொடர்பினும் நூல்நயம் உயர்வுற்று விளங்குதல் அறியலாம். "உண்மையே! கல்வி ஒரு கள். கள்வெறி போலவே கல்வி வெறியும் எல்லாவற்றையும் மறக்கச் செய்யும்; உடல் நலத்தையும் புறக்கணிக்கச் செய்யும்" என்று பெரியார் ஒருவர் கூறுவது இங்கே நினைவிற்கு வருகின்றது. கல்வியில் இன்பம்கண்டவர் எதன்பொருட்டும் அதனைக் கைவிடார். பண்புடையாளர் தொடர்பும் நூல் நயமும் ஒன்றுபடுதலும் உண்டு. அஃது எங்கே? கற்றவர் குழுவில் என்க. அவர்தம் கூட்டத்தில் மேற்கூறிய இருபேரின்பமும் ஒருசேரப் பெறலாம். ஆதலின், அதனைவிட உயர்ந்த பேரின்பம் ஒன்று உள்ளதோ? "மேலுலகத்தை இன்பவுலகம் என்று கூறுகின்றனரே, அங்கு இவ்வின்பத்தைவிடச் சிறந்தது உண்டெனின் கூறுங்கள்" என்று சமண முனிவர் ஒருவர் வினவுகின்றார்.

> "தவலருந் தொல்கேள்வித் தன்மை உடையார்
> இகலிலர் எஃகுடையார் தம்முள் குழீஇ
> நகலின் இனிதாயின் காண்பாம் அகல்வானத்
> தும்பர் உறைவார் பதி" (நாலடியார். 137)

இங்ஙனம் இன்பவூற்றாக உள்ள கல்வியில் சாந்துணையும் தலைப்படாதவர் யாவர்?

1. இளமையில் கழகத்திற்குச் சென்று ஆசிரியரிடம் கற்றல் வேண்டும். இளமையில் கல்லாதார்க்குப் பின்னர் கல்வியில் ஆர்வம் பிறத்தல் இல்லை. மூளை நரம்புகளுக்கு இளமையில் பயிற்சியளிக்காது விட்டுவிடின், பின்னர் அவை பயிற்சி பெறுதல் இயலாது என்பர் உடலியலார். எனவே, இளமையை வீணில் கழித்தோர் கல்விக் கண் இழந்தோர் ஆவர்.

2. இளமையில் கழகம் சேர்ந்து கல்லாதவர் சிலர், இளமை நீங்கிய பின், பல இடர்களுக்கு இடையே விடா முயற்சியுடைய ராய்க் கற்றுத் தேர்ந்து பேரறிஞராய் விளங்குகின்றனர். உலகப் பெரியார்களுள் இன்னார் சிலர் உள்ளனர். அவர் கற்க முடிந்ததே எனின், அதற்குக் காரணம் உண்டு. அவர்தம் வாழ்க்கை வரலாறு களை ஆராய்க. அவர் இளமையில் பள்ளிக்குச் சென்று எண்ணும் எழுத்தும் கற்காவிடினும், உலகியற் செய்திகளை அறிவதிலும் ஆழ்ந்த கருத்துக்களை எண்ணுவதிலும் எவ்வாறே பயிற்சி பெற்றனர். தாய் தந்தையர் வளர்த்த நன்முறையால் அப்பயிற்சியைப் பெற் றிருக்கலாம். அன்றி, நண்பர்கள் கூட்டுறவால் எய்தியிருக்கலாம். அவர் தம் வறுமையும் தனித்த வாழ்வும் பிறவும் அப் பயிற்சிக்குக் காரணமாக இருந்திருக்கலாம். இப் பயிற்சியே பிற்காலத்தில் அவரைக் கற்றவர் ஆக்குகின்றது. இப் பயிற்சியும் இல்லாதவர்க்குச் சாந்துணையும் கல்வியில் ஊக்கம் பிறக்குமோ?

3. இளமையும் கடந்தவராய், பயிற்சியும் பெறாதவராய் வாழ்ந்த சிலர் நாற்பது, ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகு, ஊக்கம் பெற்று, எழுத்து முதலாக எல்லாம் கற்று அறிஞராக விளங்குதலும் உண்டு. இஃது எங்ஙனமோ எனின், அவர், இளமையும் பயிற்சியும் இழந் தாரேனும், கற்கும் மாணவர்க்கு வேண்டுவதான படிந்த மனம் இழந்தாரல்லர். 'இல்லார்போல் ஏக்கற்றுங் கற்றல்' வேண்டும் என்றார் பொய்யாமொழியார். படிந்த மனம் பெறாதவர் படித்தலும் இயலாது; படித்தவழிப் படிதலும் இயலாது. இத்தகைய மனம் உடைய ஒருவருடன் யான் பழகியுள்ளேன். அவர், ஐம்பது ஆண்டு நிரம்பியும், இளமாணவர் போலவே முயற்சியுடையவராய் விளங்கு கின்றார். தம் வயதை யாரேனும் குறிப்பிடினும், அதனைப் பொய் என்பவர்போல நகைத்துத் தடுப்பர். இத்தகையோர் வாழ்நாள் முழுதும் மாணவராய்க் கற்று அறிவுருவாய்த் திகழ்வர். எனவே, இளமையும் பயிற்சியும் இல்லை எனினும் படிந்த மனமாவது வேண் டுமே. அதுவும் இல்லாதவர், பாடம் அறியாமலேயே பாடை அறிதல் திண்ணம்.

மேற்குறித்த மூன்று சிறந்த பண்புகளையும் உலகறிந்த புலவரான ஷேக்ஸ்பியர் (Shakespeare) வெனிஸ் வணிகன் (The Merchant of Venice) என்னும் தமது நாடகத்தில் குறித்துள்ளார். போர்ஷியா என்னும் செல்வியைப் பஸானியோ என்னும் இளைஞன் காதலித்து அவளை மணந்து வாழும் உரிமை பெறுகின்றான். அவளும் மகிழ்கின்றாள். கட்டழகியான அவள் தன்னையும் தனக்குரிய அளவற்ற செல்வம் முதலியவற்றையும் அவனிடம் ஒப்புவிக்கும்போது, அடக்கம் என்னும் அரும் பண்பு விளங்கப் பின்வருமாறு கூறுகின்றாள்:—

“அறிவன அறிந்திலேன்; கற்பன கற்றிலேன்; பயில்வன பயின்றிலேன்; ஆயினும் வருந்திலேன். கற்றற்கு உரிய இளமை இன்னும் கழிந்திலது; ஆதலின் இனியும் கற்றல் கூடும் என்பது குறித்து மகிழ்கின்றேன். அறிவைக் கெடுக்கும் முறையில் என் பெற்றோர் என்னை வளர்த்தாரல்லர்; ஆதலின் கற்கும் ஆற்றலை யான் இழந்திலேன்; இதனை நினைக்க மகிழ்ச்சி பெருகுகின்றது. பணிவுடைய என் நல்லியல்பு நீர் திருத்துமாறு திருந்த வல்லது; நீரே என் ஆசிரியர், தலைவர், அரசர்; இதனை எண்ணுங்கால் என் உவகைக்கு எல்லை இல்லை.”

கல்வியைப் பற்றிய பழமொழிகள்.

திருவளர் செல்வன். சிவ. காந்திமதிநாதன்.

‘இளமையிற்கல். இளமையிற் கல்வி சிலைமேல் எழுத்து. கல்வியே கருந்தனம். கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி. கல்வியே கைகண்ட பொருள். கல்வியைக்கல் கற்றபடி நில். காலையில் குளி கல்வியைத் தெளி. கலைபல வாசி, கற்றவரை நேசி. வித்தை விருப்பு. ஓதுவதொழியேல். ஓதாதார்க்கில்லை உணர்வொடு ஒழுக்கம். ஓதாமல் ஒருநாளும் இருக்கவேண்டாம். நூல்பலகல். நான்முறை தெரிந்து சீலத்தொழுகு. காலை மாலை நூலை ஓது. நூறுநாள் படித்து ஆறுநாள் விடக்கெடும். கண்டது கற்கப் பண்டிதனாவான். பாடம் (பாடை) ஏறினும் ஏடது கைவிடேல். கேள்வி முயல். எண்ணெழுத்திகழேல். எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும். கல்விபேகண். கல்வி இல்லாச் செல்வம் கற்பில்லா அழகே. கற்றோர்க்குக் கல்வி அழகே அழகு. தோழனாவது துலங்கிய கல்வி. வித்துவான் தனவான்; புத்திமான் பலவான். வித்துவானுக்கு எது பரதேசம். கல்வியுள்ள வாலிபன் கனகிழவனே. கற்றவனுக்கு எந்த வித்தையும் கால்நாழிகை. கல்லாதவரே கண்ணில்லாதார். வித்தையுள்ளவன் பெரியவன். தனக்குப் பாழ்கற்றறிவில்லாவுடப்பு. படியாதவனும் படித்தவனும் கொக்கும் அன்னமும் போல்வர். கல்வியே கற்புடைப் பெண்டிர். கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு’

ஆதியை அழைத்த ஆனை.

வேலூர் திரு. பா. கமலநாதன் அவர்கள்.

மனிதரில் பல வகையினர் உளர். 'மனிதரிலே பறவையுமுண்டு, விலங்குமுண்டு, புல்லுமுண்டு, கல்லுமுண்டு' உருவில் மனிதராய்த் தோன்றுபவரெல்லாரும் மனிதரல்லர்; மனிதத் தன்மை முற்றும் பெற்றவரே உண்மை மனிதராவர். ஒல்காப் புகழ்படைத்த தொல்காப்பியனாரும் மக்கள், மாக்களென்ற பகுப்பினை வற்புறுத்தியுள்ளார். அவற்றுள் மக்களே மிக்கோர் ஆவர். நல்லியல்புகள் பொருந்தியவராய்ப் பகுத்தறிவோடும் விளங்குபவரே மக்களென்றும், இழிந்த இயல்புகளையுடையவராய் உயிர்வாழ்பவரே மாக்களென்றும் கொள்ளலாம்.

விழுமிய பிறப்பாகப் பெரியோர் பலர் பேசும் மனிதப் பிறவியில் தோன்றுவதாலேயே அருமை யொன்றுமில்லை. மனிதன் தன்னை உண்மை மனிதனாகப் பண்படுத்திக் கொள்வதில்தான் பெருமை உளது. இதுபற்றியே, "அரிது அரிது மானிடர் ஆதல் அரிது" என்று ஔவையாரும் செவ்வையாகச் சொல்லினர்.

மனிதனைப்போலப் பகுத்தறிவு பெறாத பிராணிகளில் சில, பிறவிப்பயன் பெற உண்மையில் மனிதனைப்போல முயன்று பேறு பெற்றதாகப் புராணங்கள் புகல்கின்றன. சிலந்தி, பாம்பு, மயில், யானை முதலியன அவற்றிற் சில. ஈண்டு இறைவனடியை நினைந்து பேறுபெற்ற ஒரு யானையைப்பற்றி ஒரு சிறிது கூறுவோம்.

திருப்பாற் கடலிலுள்ளதோர் தீவில் பொற்சிகரமுடைய அற்புத மலையொன்றுண்டு. திரிகூடமலையென்பது அதன் பெயர். அம்மலையைச்சார்ந்த வானளாவிய மரங்களடர்ந்த கானகத்தில் கரிக் கூட்டங்கள் வசித்திருக்கும். அவைகட்கு ஆற்றல் மிக்க தலைவனில்லாக் குறை பெரிதாயிருந்தது. ஒருநாள் பருமனும் பலமும், பொலிவுமுள்ளதோர் ஆனையை அவை காட்டில் கண்டன. களிபேருவகைகொண்டன. அந்தயானையை அண்மித் தம் கூட்டத்திற்குத் தலைமைவகிக்கவேண்டின. அவ்வேண்டுகோளுக்கிரங்கிய அதனைத் தம்மிருப்பிடமழைத்துச் சென்று பட்டங்கட்டிக் கஜேந்திரனாகக் கொண்டன. அக்கஜேந்திரனும் அக்கரிக் கூட்டங்களோடு கானகத்தே திரிந்திருந்தான்.

முற்றத் துறந்த நற்றவ முனிவர் வதியு மவ்வனத்தே வனப்பு வாய்ந்த வாவிகளும் தாமரைத் தடாகங்களும் பல உண்டு. அவைகளில் அழகியதோர் குளமொன்று கண்டவர் உளத்தை மலரச் செய்யும் நறுமண மலர்கள் பல பூத்ததா யிருந்தது. அதில் கண்ணைக் கவரும் கமலப் பூக்களும், அழகிய ஆம்பல்களும், செவ்விய செங்கழுநீர் மலர்களும் மலர்ந்திருக்கும். மீனினம் துள்ளிக் குதிக்கும். மானினமும், மற்ற வன விலங்கினமும் வேட்கை தணியத் தண்ணீரருந்த அங்குறும். யானைகளும் அதில் அமிழ்ந்து நீராடியும், நீரருந்தியும், நீர் விளையாடியும் நிற்கும்.

கஜேந்திரன் ஒருநாள் தண்ணீர்குடிக்க அக்குளத்திற்கு வந்தான். நீரில் இறங்கினான். அக்குளத்தடியில் கரந்து வாழும் கராவொன்று கஜேந்திரன் காலைக் கௌவிற்று. கஜேந்திரன் திடுக்குற்றான். கரா கௌவிய காலை விடாது அதனை நீரினுள் இழுக்கப் பார்த்தது. கஜேந்திரன் திமிறிக்கொண்டு கொடிய கராவின் வாயினின்றும் விடுவித்துக்கொள்ள முயன்றான்; முடியவில்லை. மீண்டும் மீண்டும் முயன்றான். முதலையா விடும்? 'மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா' என்பது பழமொழியல்லவா? முதலைக்கு நீரினுள் வலிவு மிகுதியாகலின், யானையால் ஒன்றும் செய்ய முடியவில்லை. நிலைமாற்றத்தால் வலியிழந்து, அலைவுற்ற மனத்தொடும், மேற்கொண்டு செய்வதின்னதென அறியாது நின்ற ஆனைக்குத் தன்னால் தப்பித்துக்கொள்வது முடியாதென ஏற்பட்டது. உடனே உயிர்களின் உள்ளமலர்மிசை உறையும் அளப்பரும் ஆற்றலுடைய இறைவன் மீது எண்ணம் சென்றது. தன் பலத்தில் நம்பிக்கை இழந்தது. ஆதிப்பிரானே அருந்துயர் அகற்றித் தன்னைத் தப்புவிப்பான் என்னும் ஒப்பற்ற எண்ணம் அதன் மனத்தின்கண் எழுந்தது. உடனே "ஆதிமூலமே" என ஓலமிட்டது. 'அடியேனைக் காக்க வாராயோ' எனத் தாழ்மையோடும் கருணையங் கடலை விளித்துக் கசிந்துருகிக் கண்ணீருகுத்து நின்றது.

மாமணி மண்டபத்தே கொண்டல் வண்ணன் எண்டிசையோரும் போற்ற வீற்றிருக்கின்றான். ஞாலத்தின்மீது யானையிட்ட ஓலம் அவன் காதிற் படுகின்றது. அபயக்குரல் கேட்டவளவில் கருடன் மீதூர்ந்து காற்றினும் கடுகக் காசினி நோக்கிப் புறப்பட்டுவிட்டார் பெருமாளும்! "நொந்தேன்" என்னுமுன் "வந்தேன்" என்று ஆபத்துவேளையில் விரைவில் தோன்றி உயிர்களின் தாபத்தைத் தொலைத்து அருள் வழங்கக் கார்வண்ணன் காத்திருக்கின்றானல்லவா?

புள்ளூர்ந்து பறந்துவந்த பெருமானைக் கண்டு கஜேந்திரன் உள்ளூர இன்பங்கொண்டான். அண்ணலின் உபய பாதங்களும் அபய அஸ்தமும் கண்டு, துயரெல்லாம் விண்டு, கதி நமக்குண்டு என எண்ணிக் களிப்புக் கடலில் ஆழ்ந்தான். பெருமாளைப் பலவாறாகப் போற்றிப் பணிந்தான்.

நொந்து நின்ற சிந்துரத்தின் வெந்துயர் களையச் சுந்தரமாய் அந்தரத்தே நின்ற அண்ணலும் தன் கைத்தலத்திருந்த ஆழியைச் சுழற்றிக் கராவின்மீது செலுத்தினான். அவ்வாழியும் அரைநொடிப் போதினில் சென்று கொடிய கராவின் தலையைத் துணித்து வாவியிற் படிந்து கமலக்கண்ணன் கையை அடைந்தது.

காலைக் கௌவிய கொடிய கரா கொல்லப்பட்டதால், எல்லையில் துயரினின்றும் மீண்ட கஜேந்திரன் தன் பண்டைய உருவில் இந்திரத் துய்ம்மனாக விளங்கி மாயவனை, மன மொழி மெய்களால் வழிபடுகின்றான். கண்ணீரும் கம்பலையுமாய் நிற்கின்றான். நீலமேகனும் அவனது வழிபாட்டிற்கிரங்கி, ஞாலமிசை நெடிது வாழ்ந்து பின் கோலமார் வைகுந்தம் அடைய அருள் செய்கின்றான். ஐயனது படையாகிய ஆழியால் ஆவி நீத்த கராவும், முன்னைய கந்தருவனுருவில் முகுந்தன்முன் நின்று நெஞ்சுருக நெடுமாலைப் போற்ற, கந்தருவ உலகம் சென்றிருந்து பின் அந்தமி லின்பம்பெறக் கந்தருவனுக்குப் பாற்கடற்பள்ளியான் அருள் செய்கின்றான்.

கஜேந்திரனும் கராவும் முற்பிறப்பில் முறையே "சங்கப் புலவர்கள் தழைத்தினிதமர்ந்த மங்கலப் பாண்டிநாட்டை' ஆண்ட இந்திரத் துய்ம்மனும், கந்தருவனாகவிருந்த ஹூஹூ என்பவனுமாவர். தவஞ் செய்திருந்தபோது 'சந்தனப் பொதியச் செந்தமிழ் முனி' இந்திரத் துய்ம்மனை அடைந்து அவன் அங்குற்ற வரலாற்றை வினவினார். யாரோ தன் தவத்திற்கு ஊறு விளைவிப்பதாக எண்ணிய அரசன் மரியாதையின்றி முனிவரைப் பேசி, போகுமாறு சொன்ன குற்றத்திற்காகக் குறுமுனி அரையனை யானையாக்கி ஆரணியத்தில் வெறி கொண்டலையச் சபித்தனர். பின்னர், மன்னன் வேண்டியபடி மாயவனை மறவாத மனத்தொடு இருக்கவும், இறுதியில் நாராயணனால் நற்கதி பெறவும் அருள் செய்தார். தேவலன் என்னும் இருடி குளிக்கும்போது குளத்தில் அவரது கால்களைப்பற்றி ஈர்த்து விளையாடிய

குற்றத்திற்காக ஹூஹூ என்னும் கந்தருவனைக் கொடிய கராவாக முனிவர் சாபமிட்டனர். சாரங்கபாணியின் சக்கரத்தால் சாபம் நீங்கப்பெறுவாய் எனத் திருவாய் மலர்ந்தருளினர்.

அன்பர்காள்! இதுதான் கதை. இதினின்றும் நாம் பெறும் படிப்பினையாது? அல்லும் பகலும் அநவரதமும் ஆண்டவனைப் பணிவோடும் போற்றல் வேண்டும். ஐம்புலன்களையும் அவனிடம் ஈடுபடுத்தல்வேண்டும். அப்படிச் செய்யின் புலன்கள் இறைமயமாகும். மனத்தின் மாசு அகலும். இறுமாப்பு அறுமாறு ஒழுகற்கு இதுவே சாதனமாம். இறுமாப்பாலன்றோ இவ்வுலகில் சண்டைகளும், சங்கடங்களும் ஏற்படுகின்றன. இது ஒழிந்தால், இகத்திலும் பரத்திலும் நன்மை உண்டாகுமல்லவா? 'என் செயலாவதொன்றுமில்லை; எல்லாம் இறைவன் செயலே' என எண்ணி வாழும் புண்ணியப்பேறே பெரும் பேருகும். மனிதன் புனிதனுக வாழும் வகையிதுவே. முனைப்பு அற, அற முதல்வன் அடியிணை அடைதல் எளிதாகும். "சென்று சென்றணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றும்" என்றே மணிவாசகப் பெருமானும் கூறியுள்ளார். கஜேந்திரன் தன் பலத்தையே பெரிதென நம்பி நின்றவரையில் இறைவன் இன்னருள் அவற்குக் கிடைக்கவில்லை. தன் செயலால் ஆவது ஒன்றுமில்லை என்றுணர்ந்து அவன் அகந்தை அடியோடு அழிந்தபின் தான்-ஆழிப்பிரான் அவனது அருந்துயர் அகற்ற அந்தரத்தே வந்து நின்ருன். ஆகலின், அகந்தையை அகற்றினுலன்றி ஆண்டவனை அடைதல் இயலாதென்பதை இதயத்தில் இருத்தி, இடையீடின்றி இறையன்பு செய்தல் வேண்டும். இதனுல் இறுமாப்பு இல்லாதொழியும். இன்பநிலை எய்தும். உலகிடை வீண் வாழ்வு வாழ்வதும் வீழ்வதுமாயிருப்பது விடுத்து, இறைவன்பால் அடைக்கலம் புகுந்து பெருவாழ்வு வாழ்தலை விரும்புதலே நேர்மையதாகும் 'மறம் எனப் படுவன அனைத்தும் ஓட்டி, அறம் எனப் படுவவனைத்தும் நாட்டி, இறைவனை இடைவிடாது வன்னியிற் பெய்த வெண்ணெயென உருகிய மனத்தோடும் போற்றி, அடிபணிந்து நின்று மரணமிலாப் பெருவாழ்வு வாழ அவனருள் நாடி நிற்க அவனே நமக்குத் திருவருள் துணைகூட்டுவானுக.

குறிப்பு:—இக்கதை பாகவதத்திலுள்ள படியாம். இதுவே கஜேந்திர மோக்ஷம் முதலிய வேறு நூல்களில் சிற்சில வேற்றுமைகள் தோற்றுமாறு கூறப்பெற்றுளது.

ஆசிரியன்.